# கொயிங்ச்யாவ் சியாரோங் (Jiarong, Guanyingqiao)




**வசிப்பிடம்:** வடமேற்கு சிசுவான் மாநிலத்தில் 5,000 ற்கும் மேற்பட்ட கொயிங்ச்யாவ் சியாரோங் மொழிபேசும் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். மொழியியலாளர் ஜோனதன் இவான்ஸ் அவர்களின்படி 'இம்மொழி தென்மேற்கு மாயெர்கங், வடமேற்கு சின்சுஅன் (Jinchuan) மற்றும் தென்கிழக்குச் சம்தாங் (Zamtang) மாவட்டங்களில் சின்சுஅன் நதியின் கிளை நதிகளின் ஓரங்களில் பேசப்படுகிறது. இதற்குக் கொயிங்ச்யாவ் என்ற பெயர் கொயிங்ச்யாவ் மொழி பேசும் பகுதியின் மையமான சின்சுஅன் மாவட்டத்தின் ஒரு தாலுகாவின் பெயரிலிருந்து வைக்கப்பட்டதாகும்.' இவர்கள் திபெத்தியர்களோடு தங்கள் வசிப்பிடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளனர். மிகச்சில வெளியாட்களே கொயிங்ச்யாவ் பகுதிக்குச் செல்கின்றனர்.

**அடையாளம்:** கொயிங்ச்யாவ் சியாரோங் மக்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தும் இவர்கள் திபெத்திய மொழியோடு நெருங்கி ஒத்துப்போகும் மொழியைப் பேசுவதில்லை மற்றும் இவர்களுக்கு வித்தியாசமான ஆரம்பம், வரலாறு, மற்றும் கலாச்சாரம் உண்டு. சில சீன அரசாங்க வல்லுநர்கள் இவர்களுக்கு ஒரு தனிச் சிறுபான்மையினர் அந்தஸ்து கொடுக்கும் பட்சத்தில் இருந்தபோதும், திபெத்திய வழக்குப் பலவீனப்படும் என்ற பயத்தில் சியாரோங் மக்களைத் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கக்கோரி சில திபெத்திய தலைவர்கள் போராட்டம் செய்ததாக நம்பப்படுகிறது.

**மொழி:** கொயிங்ச்யாவ் சியாரோங் மொழி திபெத்திய-பர்மிய மொழிக்குடும்பத்தின் ஷியங் துணைப் பிரிவைச் சேர்ந்ததாகும். இது எர்கோங் மற்றும் ஷங்சை (Shangzhai) சியாரோங் மொழிகளோடு நெருக்கமானது. இவர்களது ஜனத்தொகை மிகக்குறைவாக இருந்தபோதிலும் கொயிங்ச்யாவ் மொழியில் எட்டு வட்டார மொழி வழக்குகள் இருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. 'சம்தாங் மாவட்டத்தில் ஸியாவ்வு (Siyaowu) மற்றும் ஷ்யாவ்யிலி (Xioayili), பர்கம் மாவட்டத்தில் முஎர்ஷோங் (Muerzong), மற்றும் சின்சுஅன் மாவட்டத்தில் எலோங் (Yelong), கொயிங்ச்யாவ், தையங்ஹ (Taiyanghe), யேர (Ere) மற்றும். அர்காலி (Ergali) ஆகியவை கொயிங்ச்யாவ் மொழியின் சில வகைகள் ஆகும்.

**வரலாறு:** ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் சிசுவானின் பல்வேறு சியாரோங் இனக் கிளைகள் இன்றைய சியங் பகுதிகளின் குடிகளோடு நெருக்கிய தொடர்புடையவர்களாக இருந்தன. சியாரோங் மக்கள் பின்னாட்களில் திபெத்தியப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து அவர்களுடைய கலாச்சாரத்தை உட்கிரகித்துக் கொண்டனர்.

**மதம்:** பெரும்பாலான சியாரோங் மக்கள் இந்நாள்களில் திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர். பொன் மதம் மற்றும் சூனியமும் வழக்கத்தில் உள்ளது. பெரிய மலைகளினுள் வாசம் செய்து எல்லாக் கெட்டக் காரியங்களுக்குக் காரணமாயிருக்கும் தெய்வங்கள் என இவர்கள் நம்பும் மலைத் தெய்வங்களுக்குச் சியாரோங் மக்கள் அதிகமாகப் பயப்படுகின்றனர். 'இவர்களது புனித மலை தன்பா (Danba) மாவட்டத்திலுள்ள மொஎர்துஅ (Mo'erduo) மலையாகும். ஆவிகளைச் சமாதானப்படுத்தவும் பாதுகாப்பு அடைவதற்காகவும் எர்கோங், சியாரோங் மற்றும் மற்ற திபெத்தியர்கள் இந்த மலையை வணங்குகின்றனர். மிகமுக்கியமான ஒரு புத்த மடம் சின்சுஅன் மாவட்டத்தின் கொயன்யிங்-ச்யாவு பகுதியிலுள்ளது. சியாரோங் மக்கள் புனித ஸ்தலங்களுக்குத் தீர்த்தயாத்திரை செல்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் ஜெபச் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதைக் காணமுடியும். சில குடும்பங்கள் தங்களது குமாரனைப் படிப்பிற்காகவும் அர்ப்பணிப்பாகவும் புத்த மடங்களுக்கு அனுப்பிவைகின்றனர்.'

**கிறிஸ்துவம்:** இவர்களது தனிமையான வசிப்பிடம் இவர்களைச் சுவிசேஷத்தைக் கேட்பதிலிருந்து விலக்கிவிட்டது. மிகக்குறைந்த ஜனத்தொகையுடைய சீனாவின் இப்பகுதிகளில் சில சாலைகள் மட்டுமே உள்ளன. அரசாங்க அதிகாரிகள் மற்றும் சில துணிச்சலான வியாபாரிகள் போக மிகக்குறைவான ஹான் சீனர்கள் மட்டுமே இப்பகுதியில் வசிக்கின்றனர். கொயிங்ச்யாவ் சியாரோங் மக்களில் சிலர் மட்டுமே கிறிஸ்து இயேசுவின் பெயரைக் கேட்டிருக்கின்றனர்.




**Population:**
5,110 (2000)
6,300 (2010)
7,750 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Gyarong, Gyarung, Rgyarong, Chiarong, Jarong, Chiajung, Guanyingqiao

**மக்கள்தொகை:** 5,110 (2000, P Hattaway)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், சியாரோங் மொழி

**மொழி வழக்குகள்:** 8 (Xiaoyili, Siyaowu,Muerzong, Guanyingqiao, Ergali, Taiyanghe, Ere, Yelong)

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : JIQ

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்